# சுதந்திரன்

SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2009
சித்திரை 20
ஜமா. அவ். 24
புதன் (3-5-1978)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 94
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 35


# தமிழீழ நாட்டின் இறைமையை அங்கீகரிப்பீர்!

இலங்கை வாழ் தமிழ் நாட்டினத்தின் மரபு வழித் தாயகமாக தமிழ் ஈழத்தை ஏற்று, அதன் இறைமையை அங்கீகரிப்பதன்மூலம் பாஸிஸ சக்திகளுக்கு எதிராக சகல முற்போக்கு ஜனநாயக சக்திகளையும் ஓரணியிற் திரட்ட முன்வருமாறு தென்னிலங்கையிலுள்ள சகல முற்போக்கு சக் களுக்கும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழர் மேதின விழா அறைகூவல் விடுத்துள்ளது.

யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் 1 5-78 திங்கட்கிழமை மாலை தமிழர் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. தலைமையில் தமிழர் விடுதலைக்கூட்டணி-செந்தமிழர் இயக்கம் — இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்—மொழிவழித் தொழிற் சங்கங்கள் — ஆகியன இணைந்து நடாத்திய தமிழ்த் தொழிலாளர்களின் மேதின விழாவில் சமர்ப்பிக்கப்பட விருந்த தீர்மானங்கள் வருமாறு:—

## தமிழ் தொழிலாளர்களுக்கு கோரிக்கை

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களை ஒரு தனி நாட்டினமாக அங்கீகரித்து, இத்தீவின் வடக்கு கிழக்கு பிரதேசங்களை தமிழ் நாட்டினத்தின் மரபுவழித் தாயகமாக 'தமிழ்ஈழம்' எனஏற்று ஒரு தனிநாட்டினத்தின் பிரிந்துசெல்லும் உரிமை உட்பட்டசுயநிர்ணயஉரிமையை அங்கீகரிக்குமாறு தாம் சார்ந்திருக்கும் தொழிற்சங்கங்களையெல்லாம் வற்புறுத்துமாறும், அப்படி அங்கீகரிக்கும் தொழிற்சங்கங்களில் மட்டுமே தொடர்ந்தும் அங்கம்வகிக்குமாறும் இம்மேதினப் பொதுக்கூட்டம் சகல தமிழ்பேசும் தொழிலாளர்களையும் கோருகின்றது.

## மே தினம்

மே தினம் இன்று; மேதினம் இன்று!
மேதினி குலுங்கிட எழுந்திடு தோழா!

அடக்கு முறைகள் அடியோடு சாய்ந்திட
ஒடுக்கு முறைகள் பொடிப்பொடியாகிட
அடிமை விலங்கு சடாரென முறிந்திட
ஆணவம், பாஸிஸம் ஐயோவென்றலறிட

மேதினம் இன்று; மேதினம் இன்று
மேதினி குலுங்கிட எழுந்திடு தோழா!

உதய சூரியன் உயர எழுந்தனன்
இதயமெங்கணும் எழுச்சியின் நாதம்!
உழைக்கும் கரம் தன்வலிமை அறிந்தது!
ஊழையும் மாற்றிடும் ஒரு நாள் மலர்ந்தது!

மேதினம் இன்று; மேதினம் இன்று
மேதினி குலுங்கிட எழுந்திடு தோழா!

தமிழீழமாம் எம், தாய்த்திருநாடு
தனிநாடாகித் தரணியில் நிமிர்ந்திட
சாதி சாய்ந்திட சமநிலை மலர்ந்திட
ஊதடா சங்கம் உரிமைப் போர் முழக்கு!

மேதினம் இன்று; மேதினம் இன்று;
மேதினி குலுங்கிட எழுந்திடு தோழா!

'சிங்களச் சுரண்டல் ஒழிக'வென்றூது!
'செந்தமிழ் ஈழம் பிரிக' வென்றூது!
'தனியுடமை சாய்ந்து, பொதுவுடமை பேணும்
சமதர்மநாடு பூக்கும்' என்றூது!

மேதினம் இன்று; மேதினம் இன்று;
மேதினி குலுங்கிட எழுந்திடுதோழா!

புரட்சிபுரட்சியென், ஞர்த்தெழு தோழா!
புதுமை புதுமையென் றெழுந்திடு தோழா!
புரட்சியில் மலரும் புதுத்தமிழ் நாடு!
வரட்சி போக்கி, வளம் தரும் தோழா!

மேதினம் இன்று; மேதினம் இன்று;
மேதினி குலுங்கிட எழுந்திடு தோழா!

கோவை-மகேசன்

## தமிழர் மேதின விழாவில்
### சிங்கள முற்போக்குவாதிகளுக்கு அறைகூவல்!

### முற்போக்கு சக்திகளுக்குஅறைகூவல்

இலங்கைத்தீவின் தொழிலாள வர்க்கத்துக்கெதிராகவும், தொழிற்சங்கங்கள், மாணவர் இயக்கங்கள் ஆகியவற்றை நசுக்கும் நோக்குடனும் இயங்கும் பாஸிஸப் போக்குத் தலைதூக்கும் இக்காலகட்டத்தில் இலங்கை வாழ் தமிழ் நாட்டினத்தின் ஜனநாயக உரிமையான சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து, தமிழ் நாட்டினம் தனது மரபுவழித்தாயகமான தமிழ்ஈழத்தில் தனது இறைமையை நிலைநாட்டும் உரிமையை அங்கீகரிப்பதன் மூலம் பாஸிஸ சக்திகளுக்கு எதிராக இலங்கைத் தீவிலுள்ள சகல முற்போக்கு ஜனநாயக சக்திகளையும் ஓரணியிற் திரட்ட முன்வருமாறு தென்னிலங்கையிலுள்ள சகல தொழிற்சங்கங்களையும் முற்போக்கு சக்திகளையும் இம்மேதினக்கூட்டம் கோருகிறது.

### பாலஸ்தீனத்துக்கு ஆதரவு

இலங்கைவாழ் தமிழ்த் தேசிய இனம் தனது விடுதலைப் போராட்டத்திற்காக உலக உதவியை நாடி நிற்பதுபோல, தமது நாட்டிலிருந்து விரட்டப்பட்ட நிலையில் தமது தாயகத்தை மீட்கப் போராடிக்கொண்டிருக்கும் பலஸ்தீன மக்களின் சுயநிர்ணயஉரிமையைஐ.நா. சபைத் தீர்மான அடிப்படையில் அங்கீகரிக்க வேண்டுமெனக் கோரும் அதே வேளையில் ஏகாதிபத்தியம், குடியேற்றவாதம், இன ஒடுக்குமுறை ஆகியவற்றுக்கு எதிராகப் போராடும் சகல தேசிய விடுதலைச் சக்திகளுடனும், தேசிய விடுதலை இயக்ங்களின் சகல போராட்டங்களிலும் அவர்களுக்கு உதவியும், ஒத்தாசையும் புரிந்து வருவதுடன் உலக சமாதானத்தையும் அமைதியையும் நிலைநாட்டுவதற்காக ஆக்க ஒருமைப்பாட்டை இம் மேதினக் கூட்டம் தெரிவித்துக்கொள்கின்றது.

### சாதிக் கொடுமையை வேரறுப்போம்

தமிழ்ஈழ விடுதலைக்கும், வர்க்கபேதமற்ற சமுதாயத்தை உருவாக்க வழிவகுக்கும் வகையிலும், தமிழ் மக்களிடையே நீண்ட காலமாக இருந்துவரும் சாதிக் கொடுமையென்னும் சமூக ஏற்றத்தாழ்வுகளை முற்றாக அகற்றி தமிழ் மக்களை ஒருமுகப்படுத்தத்தக்க நடவடிக்கைகள் எடுக்கும்படி தமிழ்பேசும் மக்கள் மத்தியிலுள்ள சகல தாபனங்களையும், பொதுமக்களையும் இம் மேதினப் பொதுக்கூட்டம் கோருகின்றது.

### தமிழ் விவசாயிகள் நிலை

I. நாட்டில்முதலாளித்துவ சக்திகளைப் பலப்படுத்தி எடுக்கப்படும் நடவடிக்கைகள் அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு இடம் தருவதுடன் தொழிலாளர்கள் இதுவரை அனுபவித்து வந்த உரிமைகளை மறுக்கும் வகையிலும், தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டங்களை செல்லுபடியற்றதாக்கும்வகையிலும் நமது பொருளாதாரத்திலும் நிர்வாகத்திலும் அந்நிய நாடுகள் இறுக்கமான ஒரு பிடிப்பை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கும் வகையிலும், எடுக்கப்படும் நடவடிக்கைகளைமேற்கொள்ளும் முயற்சியையும்;

II. தமிழ், விவசாயிகளின் பொருளாதார நலனைப்பெருமளவில் பாதிக்கத்தக்கவகையில் அரசாங்கம் பின்பற்றும் வெண்காயம், உருளைக்கிழங்கு, மிளகாய் போன்ற உப உணவுப் பொருள் இறக்குமதிக்கொள்கையையும்;

III. (60,000) அறுபதினாயிரம் மீனவக் குடும்பங்களில் நாளாந்த வாழ்க்கையைப் பாதிக்கும் வகையில் இலங்கையின் ஆழ்கடல் மீன் பிடிக்கும் உரிமையை தென் கொரியா, யப்பான்போன்ற அந்நிய நாடுகளுக்கு வழங்கியதற்கும்; கருவாடு, டின் மீன் ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்கும் அரசாங்கம் எடுத்துள்ள முடிவையும்;

IV. பன்னிரண்டு லட்சம் பேர் வேலையற்றோராக இருப்பதையும் நாணய மதிப்பிறக்கத்தால் வாழ்க்கைச்செலவு விஷம்போல் ஏறியிருப்பதையும் கவனத்திற்கெடுக்காமல் எழுபது லட்சம் மக்களிடமிருந்து பங்கீட்டரிசிப் புத்தகங்களைப் பறித்துள்ளமையையும் இம் மேதினப் பொதுக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

### கூட்டுறவு தொழிலாளர் பிரச்சினை

இன்று கூட்டுறவுப் பணியாளர்களின் தொழிற் பிரச்சினையைதீர்த்துவைக்கவென நியமிக்கப்பட்டுள்ள கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவைக் கலைக்கவேண்டுமெனவும், ஏனைய தொழியாளர்களுக்கு உள்ள உரிமைபோல கூட்டுறவுத் தொழிலாளர்களுக்கும்இந்நாட்டின்தொழிற் பிணக்குச் சட்டத்தின்கீழ் நிவாரணம் பெற உரிமை தரவேண்டும் என்றும் இம்மேதினப் பொதுக்கூட்டம் கோருகின்றது.

### மும்மொழி வேண்டாம்

மும்மொழித்திட்டமென்பது தனிச்சிங்கள மொழித் திணிப்பிற்கும் இறுதியில் தமிழ் இன அழிவிற்கும் வழி வகுக்கும் என்ற காரணத்தால்எந்தவகையிலும்இதனை நடைமுறைப்படுத்த உதவ வேண்டாமென்று சம்பந்தப்பட்டவர்களை இம் மே தினப் பொதுக்கூட்டம் கோருகின்றது.

## செல்வா நினைவாக இலவச பாடநூல் உபகரணங்கள்

2-5-78ல் யாழ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு, வெ. யோகேஸ்வரன் தலைமையில் நாவாந்துறையில் தந்தை செல்வாவின் ஞாபகார்த்தமாக அங்குள்ள மாணவர்களுக்கு இலவசமாக பாடநூல், உபகரணங்கள்வழங்கி இருக்கிறார்கள். இதற்கான வேலைகளை நாவாந்துறை இளைஞர் பேரவை தலைவரும் நாவாந்துறை சனசமூக நிலையத் தலைவரும், கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குனர் சபை உறுப்பினருமான திரு; செ. அமிர்தநாதன் ஈடுபட்டுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபிரிக்க நாடுகளின் அடிமை விலங்கு ஒடிகிறது!

# ஆண்டிருந்த ஈழத் தமிழனே உன் அலங்கோலம் பார்த்தாயா?

## தாயகத்தின் சுதந்திரத்தை மீட்டிட மே நாளில் சபதம் ஏற்போம்!

நெடிதுயர்ந்த மரங்கள் நிறைந்த காடுகளின் நடுவே உறையும் கொடிய விலங்குகளின் கூடாரமாகக் கொலு வீற்றிருந்த ஆபிரிக்காக் கண்டம், இன்று அகில உலக அரசியலையே ஆட்டிப் படைக்கும் ஓர் மகத்தான சக்தியாகத் திகழ்கிறது. இருண்ட கண்டம் என்று இழித்துக் கூறியோர் ஏராளம்! வரண்ட தேகமும் சுருண்டமயிரும் கொண்ட மருண்ட விழி நீக்ரோக்கள் திரண்டு வாழும் கானகம் என்று பழித்தோர் பலர்!

"நாகரீகமற்ற நரிக்குறவர்களுக்கும் ஒரு நாடா?" என்று நாக்கூசாது நவின்றோர் எண்ணற்றோர். "அடிமையாக வாழ்வதற்கென்றே இந்த அவனியில் பிறந்தவர்கள்" என்று அரற்றியது ஒரு கூட்டம்; "ஆளப்பிறந்த வெள்ளையனின் அடி வருடி வாழ்வதற்கென்றே ஆண்டவனால் படைக்கப்பட்ட அபூர்வ ஜன்மங்கள்" என்று அகமகிழ்ந்து பாடியது இன்னொரு கூட்டம். ஆம்! இத்தனை சுடு சொற்களையும், வசை மொழிகளையும் வாயாரக் கேட்டு அனுபவித்த இந்த ஆபிரிக்கர்தான்—நீக்ரோக்கள் என்று நீசத்தனமாக இகழ்ந்துரைக்கப்பட்ட இந்த ஆபிரிக்கர்கள் தான்—இன்று ஐம்பதுக்கு மேற்பட்ட சுதந்திர நாடுகளையமைத்து, அடிமைத்தளையில் வீழ்ந்து கிடக்கும் ஏனைய நாடுகட்கோர் உதாரணமாகத் திகழ்கிறார்கள் என்றால் ஆச்சரியமாக இல்லையா?

ஆபிரிக்க மண்ணிலே புதைந்து கிடந்த தங்கத்தையும், பொன்னையும்' வெள்ளியையும், மற்றும் கிடைத்தற்கரிய கனிவளங்களையும், ஆண்டாண்டு காலமாகச் சூறையாடி, கொள்ளையடித்து—அந்தச்சுகத்திலேயே கொழுத்து நெளிந்த வெள்ளைக்காரத் துரைகளுக்கு இன்று அங்கு வேலையில்லை. ஆயிரமாயிரமாக நீக்ரோக்களைக் கொன்று குவித்து. அவர்களின் இரத்தத்திலே நீச்சலடித்து, வேட்டையாடி மகிழ்ந்த வீணர்களின் வெறியாட்டம் இனி ஆபிரிக்கமண்ணிலே தலை காட்ட முடியாது. "கறுப்பன்" எனக் கூறிக் காலடியில் போட்டு மிதித்த காலம் மலையேறி விட்டது. கறுப்பு மனிதனை வெள்ளை மனிதன் தெருக்களிலே விலை கூறி விற்ற சரித்திரத்தின் கறை படிந்த அத்தியாயங்கள் கால வெள்ளத்திலே கழுவப்பட்டு விட்டன. இன்று அவர்கள் சுதந்திர புருஷர்கள். போர்த்துக்கேயர்களால் அவர்களின் சுதந்திர எழுச்சிகளைத் தீயிட்டுப் பொசுக்கிட முடியவில்லை. ஒல்லாந்தர்களால் அவர்களின் உரிமை வேட்கையை ஒடுக்கிட முடியவில்லை. இத்தாலியர்களினால் அவர்களின் இரத்தத்தைத்தான் சுவைக்க முடிந்ததே தவிர, கொழுந்துவிட்டெரிந்த சுதந்திர உணர்வுகளைக் கொன்றொழிக்க முடியவில்லை. "சூரியனே, தன்னைக் கேட்டுத்தான் எழும்! விழும்;" என்று சூளுரைத்த வெள்ளையனால் கூட அவர்களின் விடுதலைக் கிளர்ச்சிகளைச் சுட்டெரிக்க முடியவில்லை. எதிர்த்தெழுந்த ஸ்பானியர்கள் இருந்த இடம் தெரியாது எங்கோ மறைந்தனர். இப்படி எத்தனையோ ஏகாதிபத்தியச் சக்திகளின் மத்தியிலே சிக்கிச் சீரழிந்த போதிலும், கதிர் பரப்பும் செஞ்சுடர் போல் காலத்தை வென்று காட்சி தரும் இந்தக் கறுப்பர்களின் மீட்சி, காட்டிட வேண்டும் நமக்கோர் ஆட்சி.

நவீன காலனித்துவ வாதிகளின் நச்சுக் கொள்கைகளுக்கு என்றோ கல்லறை கட்டிய போதிலும், அவற்றின் சின்னங்களாக, ஆங்காங்கே எஞ்சிக்கிடக்கும் இடங்களிலே இன்றும் யுத்த பேரிகை முழங்கிக் கொண்டிருப்பதைக் காணலாம். மூர்க்கத்தனமான போர்த்துக்கேயரின் கீர்த்திமிக்க அடக்குமுறை மொசாம்பிக்கில் மூச்சடங்கிய வரலாறு நமக்குப் புரியாத தொன்றல்ல! அங்கோலாவில் அவர்கள் கட்டவிழ்த்துவிட்ட அக்கிரம ஆட்சி மங்கி மடிந்துவிட்ட சரித்திரம் எமக்குத் தெரியாத தொன்றல்ல! அச்சத்தின் பிடியிலே ஆட்பட்டு அவதியுறும் றொடீசியாவில் வெள்ளையர் ஆட்சி ஆட்டங் காண்கிறது! நிற வெறிபிடித்த தென்னாபிரிக்கா நிலைகுலைந்து தவிக்கிறது! 'ஆபிரிக்கா ஆபிரிக்கர்களுக்கே" என்ற கோசம் வானைமுட்டி மோதி முழுங்குகிறது. சிறுபான்மை வெள்ளையர் "ஆட்சிக் கெதிராக செங்குருதி சிந்திட, செந்தழல் கனன்றிட, செங்களமாடி வரும் சிங்கேறுகளின் செம்படை கண்டு றொடீசிய, தென்னாபிரிக்க ஆட்சிமன்றங்கள் அதிர்ந்துபோய் செயலிழந்து கிடக்கின்றன. ஆம்! எதற்குமே உதவாத ஈனப் பிறவிகள் என்று யாரை இழித்தும், பழித்தும், தூற்றித்திரிந்தார்களோ, அதே கறுப்பர்களின் விடுதலை வெறிதான் இன்று தென்னாபிரிக்க, றொடீசிய வெள்ளையர்களின் கழுத்தை நெரிக்கும் கருநாகமாக மாறியுள்ளது. எத்தனை பெரிய உண்மை! நம்பமுடியாத நிகழ்ச்சி! நினைக்கும்பொழுது எத்தகைய நெகிழ்ச்சி! விடுதலை விரும்பிகளின் உள்ளத்திலோ மகிழ்ச்சி! வெள்ளையர் மனதிலோ அதிர்ச்சி! தொடர்ந்து வளர்வதோ கிளர்ச்சி! எனினும் நம்ப மறுக்கிறது அறிவு முதிர்ச்சி!

அலங்கோலமான தோற்றம். அவலட்சணமான அங்கவமைப்பு. அமாவாசைக் கறுப்பு. நாகரீகம் என்றால் எதுவென்றே உணரமுடியாத அநாகரீகப் பிறவிகள். மலைக்குகைகளிலே மறைந்து வாழும் மந்தபுத்தி கொண்ட மானிட ஜன்மங்கள். அழகான மொழியில்லை. உள்ள மொழியிலும் வளமில்லை. தேசியப் பெருமை தேடியலைந்தாலும் கிடையாது. எதைக்குறிப்பிட்டு அவர்களை உயர்த்திச் சொல்வது என்ற வினவுக்கே இடமில்லை. எனினும் தங்களுக்குள்ள ஒரேயொருதகுதி, உயர்வு, உயிர் என்பதெல்லாம் சுதந்திர வாழ்வுதான் என்பதை மட்டும் நன்கு புரிந்து கொண்டார்கள். ஆனால் நம்முடைய நிலையோ...?

வளமான மொழியுண்டு. வரலாறு சாற்றிடும் பெருமை பலவுண்டு. தரமான இலக்கியங்களுண்டு. தங்கம் சொரியும் பூமியுண்டு. உலகத்துக்கே நாகரீகம் போதித்தவர்கள் என்ற பழம் பெருமையுண்டு. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடுண்டு. புலவர் பெருமக்கள் போற்றிப்புகழ் வளர்த்த தமிழணங்கு உலவிடும் தாயகம் உண்டு. மலைமகளும், நிலமகளும், கலைமகளும் கரங்கோர்த்து ஒளிர்ந்திடும் காட்சியுண்டு. கலைகள் மிளிர்ந்திடும் மாட்சியுண்டு. தமிழன் பெற்றிராத தனிச் சிறப்பு எதுவுமே தாரணியில் இல்லை என மாற்றார் கூறிட வாழ்ந்தவன். எனினும் இவையாவும் இருந்தென்ன? இன்னுயிர் போன்ற சுதந்திரம் இல்லையே! காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த கறுப்பர்கள் கண்ட சுதந்திர எழுச்சிகளில் கடுகளவு கூட நம்மிடமில்லையா? தாழ்வுற்றுப் பாழ்பட்டு, வீழ்ந்து கிடந்த இனமெல்லாம் தனியரசமைத்துத் தலைநிமிர்ந்து வாழ, ஏற்கனவே மணிமகுடம் தரித்து மண்டலமாண்ட நமதினம் நாயினும் கீழாக நலிவடைந்து கிடக்கிறது. நேற்றுவந்த நீக்ரோக்களின் குரல்கள் அடுக்கடுக்காக ஒலிக்கும் ஐக்கிய நாடுகள் சபையிலே, திரைகடலோடியும் திரவியம்தேடிய நமது குரல் ஒலிக்கவில்லை.

1500 மைல்களுக்கப்பால் உள்ள டில்லி ஏகாதிபத்திய தாசர்களிடம் தலைவணங்கிக்கிடக்கும் தமிழகம் அங்கு.

சிங்கள ஏகாதிபத்திய வாதிகளின் காலடியில் சிறைப்பட்டுக் கிடக்கும் ஈழத்தமிழகம் இங்கு.

இந்தி செய்யும் இழிவுகள் அங்கே!

சீறிப்பாயும் சிங்களம் இங்கே!

தடை பல தாண்டி, படை நடத்திக் களம் காணக்காத்திருக்கும் எமக்கோர் எடுத்துக்காட்டாக ஏற்றங் கொள் ஆபிரிக்கர்களின் வாழ்க்கை அமையவேண்டும். அங்குலம், அங்குலமாக ஆபிரிக்க மண்ணினை அந்நியர் வசம் இருந்து மீட்டிட அவர்கள் பட்ட தியாகம் நமக்கோர் அச்சாணியாக மிளிரவேண்டும். அவர்கள் சிந்திய இரத்தம் நாம் சிந்தப்போகும் உதிரத்தின் ஆச்சாரமாக ஒளிர வேண்டும். "இன்று ஆபிரிக்கர்கள்! நாளை நாங்கள்" என்ற உணர்வுகள் கிளர்ந்தெழவேண்டும். செக்கர் வானத்தைக் கிழித்துக் கொண்டு உதயமாகும் செம்பரிதியின் தங்கக்கிரணங்கள் நாற்புறமும் கதிர் பரப்பி எப்படி உலகுக்கு ஒளியூட்டுகிறதோ, அதேபோல விடுதலைக்கு வித்தூட்டும் நமது உணர்வுகள் எட்டுத்திக்கும் பரவி இனத்துக்கு வழிகாட்டும் உரமாக மாறிட இந்த மேதினநாளில் திடசங்கற்பம் செய்திடுவோம்.

**எல்லாளன்**

---

## தமிழ் நாடக விழா

மத்தியவங்கி தமிழ் இலக்கிய மன்றம் தலைநகரில் நடாத்தவிருக்கும் அறுபது நிமிடங்களுக்குள்ளான தமிழ் நாடக விழாவுக்கான விண்ணப்பக் கடைசித்திகதி 1978 ஏப்பிரல் 30ஆந் திகதியாகும். விபரங்கள் வேண்டுவோர், செயலாளர், மத்தியவங்கித் தமிழ் இலக்கிய மன்றம், த. பெ. இல, 190, கொழும்பு-1 எனும் முகவரியுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்,

---




மில்க்வைற்—யாழ்ப்பாணம்.

---

## சிங்கள-தமிழ் தலைவர்களுக்கிடையில் உடன்பாடு ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் நிராகரிப்பு!

சிங்கள—தமிழ்த் தலைவர்களுக்கிடையே பேச்சுவார்த்தை மூலம் உடன்படிக்கை ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகளை லண்டனில் கூடிய ஈழத்தமிழர்கழகம் நிராகரித்துள்ளது. சிறீலங்காவிலிருந்து தமிழ்ஈழம் நோக்கிவரும் தமிழ் அகதிகளுக்கு தமிழ் ஈழத்திலேயே மறுவாழ்வு அளிக்கும் முயற்சிகளை ஊக்கப்படுத்துவதென்றும் இத்துறையில் தமிழ் அகதிகள் மறுவாழ்வு கழகத்துக்கு உதவியாக இருப்பதென்றும் மேற்படி கழக பொதுச்சபைக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

பொதுக் கூட்டம், அண்மையில் வண்டனிலுள்ள விம்பள்டன் சமூகநிலையத்தில் நடைபெற்றபோதே மேற்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன. தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. ஏ. சங்கரலிங்கம் கூட்டத்துக்கு தலைமை தாங்கினார்.

ஈழத் தமிழர் பிரச்சினை பிரிட்டிஷாரின் கவனத்தை திருப்புவதில் ஆர்வமுடன் ஈடுபட்டு உதவிகள் புரிந்து வரும் திரு. டேவிட் அஸ்ரர், வண. மைக்கல் ஸ்கொட் ஆகியோருக்கு நன்றிதெரிவிக்கும் தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

1978ம் ஆண்டுக்குரிய நிர்வாகிகளாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். இணைச் செயலாளர்கள் டாக்டர் பி. ரகுநாதன், திரு ஆர். மகேந்திரா, இணைப் பொருளாளர்கள்—திரு ரி. இராமச்சந்திரன், திரு டி. அஸ்பரி, செயற் குழு உறுப்பினர்கள்—டாக்டர் எஸ். சிறீனிவாசன், ஏ.எஸ். சேகரன், திரு. டி.ஸி. ஜெயராசா, ஆர். சிறீனிவாசன், எஸ். சிறீதரன், என். ராமநாதன் (அமெரிக்கா) கே. கருணாகரன் (சாம்பியா) ரி. சரவணபவன் (கனடா) எம். கருணாநிதி (அவுஸ்ரேலியா) ஏ. சிவபாதசுந்தரம்.

(சிங்கப்பூர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவினைக் கோரிக்கையை கம்யூனிஸ்டுகள் எதிர்க்கவேண்டுமென்று லெனின் கூறினரா?

## சண்முகதாசனின் திரிபுவாதம்!

பொன். பூலோகசிங்கம்

சுயநிர்ணய உரிமை என்பது ஒரு தேசிய இனம் தனக்கு எத்தகைய ஆட்சிமுறை தேவை என்பதை நிர்ணயித்துக்கொள்ள வழங்கப்படும் உரிமையாகும். அதாவது தனது தலைவிதியை தானே தீர்மானித்துக்கொள்ளும் உரிமையாகும். இந்த உரிமையைப் பயன்படுத்தி உலகில் இருக்கும் ஆட்சிமுறைகளில் எத்தகைய ஆட்சிமுறை தமக்குப் பிடித்தமானதாகவுள்ளதோ அத்தகையதொரு ஆட்சிமுறையை அமைத்துக்கொள்ள ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளில் ஒன்றே இந்த சுயநிர்ணய உரிமையாகும்.

இந்த உரிமையின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட தேசிய இனம் தமக்கு எத்தகைய ஆட்சி முறை தேவையென விரும்பி தனது அபிலாஷையை— உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துகிறதோ அந்த அபிலாஷையை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு, அவர்கள் விரும்பும் அரசை அமைத்துக் கொடுப்பதோ அல்லது அத்தகையதொரு அரசை அங்கீகரிப்பதோ தான் மனிதாபிமானமும் நியாய புத்தியும் படைத்தவர்கள் மேற்கொள்ளும் பண்புமிக்க செயலாகும். அதுவே சுயநிர்ணய உரிமை என்ற தத்துவத்தின் தாற்பரியமாகும்.

ஆனால் அண்மைக்காலமாக தம்மை இடதுசாரிகள் என்றும் பொதுவுடமைவாதிகள் என்றும் கூறிக்கொள்ளும் சில சக்திகள் "சுயநிர்ணய உரிமை" என்ற தத்துவத்திற்கு புதுப் புது வியாக்கியானம் கொடுத்து இந்த தத்துவத்தை வெறும் பொருளற்ற— சத்தற்றதொரு கோஷமாக்கி வருகிறார்கள். அவர்களது கோஷம் யாதெனில் "உங்கள் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்கிறோம்; ஆனால் பிரிந்து சென்று தனியரசு அமைக்க ஒருபோதும் நாம் இடம் கொடுக்க மாட்டோம்" என்பதே.

இந்தக் கோஷம் பெரும் நகைப்பிற்கிடமாகவும், உள்ளத் தூய்மையற்ற முறையில் சுயநிர்ணய உரிமை பற்றிப் பேசுகிறார்கள் என்பதையும் எடுத்துக்காட்டுவதாகவுள்ளது. அதாவது உங்கள் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்கிறோம்; அதைப் பயன்படுத்தி நீங்கள் அளிக்கும் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளமாட்டோம், என்று கூறுமல் கூறுகிறார்கள். அதாவது 'நீங்கள் தனிநாடுதான் தேவை என்று உங்கள் அபிலாஷையை வெளியிட்டால் அதை நாம் ஏற்கமாட்டோம்" என்று கூறுவது சுயநிர்ணய உரிமை தத்துவத்திற்கே பட்டைநாமம் சாத்துவதாகும்.

இது எப்படியெனில் உங்களுக்கு தாகம் தணிக்க தண்ணீர் அருந்த உரிமை இருக்கிறது; அதற்காக தண்ணீர்க் குவளையையும் தருகிறோம்; ஆனால் தண்ணீர் அருந்த அனுமதிக்க மாட்டோம்; என்று கூறுவது போலவும், உங்களுக்கு பசி இருக்கிறது. பசிக்கு புசிக்க உங்களுக்கு உரிமை இருக்கிறது. ஏற்றுக்கொள்கிறோம். உணவுப் பொட்டலத்தையும் தருகிறோம். ஆனால், பசி தீர்க்க உணவு அருந்த விட மாட்டோம் என்று ஒருவன் கூறினல் எப்படி இருக்குமோ; அது போலவும் இருக்கிறது. "சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கிறோம்; ஆனல் அதனடிப்படையிலான தீர்ப்பை ஏற்க மாட்டோம்" என்ற பேச்சு;

சுயநிர்ணய உரிமையை வழங்குகிறோம்; அதைப் பயன் படுத்தி நீங்கள் இத்தகையதொரு ஆட்சி முறையைத்தான் கோர வேண்டும் என்று வரையறுத்து நிர்ப்பந்தப்படுத்துவது— கட்டாயப்படுத்துவது— எல்லாம் ஆதிக்க வெறியுணர்வோடு கூடிய முறையில் தமது ஆட்சி அதிகாரத்தை மறைமுகமாகத் திணிக்கும் ஒரு அடக்கு முறை மட்டுமல்ல சுயநிர்ணய உரிமை என்ற தத்துவத்தையே கற்பழித்து மாசு படுத்துவதற்கொப்பான ஒரு செயலாகும்.

இவ்வாறு கூச்சல்போடும் ஒரு சில இடதுசாரிகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல சீன கம்யூனிஸ்ட் கட்சி பொதுச்செயலாளர் நா. சண்முகதாசன், "சுயநிர்ணய உரிமை" என்ற தத்துவத்திற்கு கொம்பும் வைத்து சுழியும் இருக்கிறதா என்று பிடித்துப்பார்த்திருக்கிறர். சில மாதங்களுக்குமுன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பட்ஜட் எதிர்ப்புக் கூட்டத்தில் இந்த "சுழி" தேடும் வேட்டையில் இறங்கி சுழியில் சிக்கியிருக்கிறர்.

"தேசிய இனங்களுக்குச் சுயநிர்ணய உரிமை வழங்கப்படத்தான்வேண்டும் என லெனின் கூறியது உண்மைதான்; விரும்பினல் அந்த இனம் பிரிந்துபோகலாம் எனக் கூறியதும் உண்மைதான்; ஆனல் அவ்வாறு பிரிந்துசெல்வதை அவர்கள் மத்தியிலுள்ள கம்யூனிஸ்டுகள் எதிர்க்கவேண்டும்" என லெனின் கூறினர் எனக்கூறி, சுயநிர்ணய உரிமை தத்துவத்திற்கு ஒருவகை சாயம் பூசியிருக்கிறர்.

ஒரு தேசிய இனம் தாம் விரும்பினல் பிரிந்து செல்லும் உரிமை இருக்கவேண்டும் என பிரிந்து செல்லும் உரிமையை ஏற்றுக்கொண்டு பிரிந்துசெல்லவும் அனுமதித்த லெனின் அதே வாயால் பிரிந்துசெல்வதை எதிர்க்கவேண்டும் என்றும் கூறியதாக திரு. சண்முகதாசன் முன்னுக்குப்பின்முரணக உளறிக்கொட்டிவருகிறர். இவ்வாறு சண்முகதாசன் சரடுவிட்டு லெனினிசவாதத்தையே ஒரு சந்தர்ப்பவாதமாகக் காட்ட முனைந்துள்ளார்.

பிரிந்துசெல்லும் உரிமையை வழங்கிய லெனின் பொதுவுடமைக் கோட்பாடான அந்த உரிமையை பொதுவுடமை வாதிகளே எதிர்க்க வேண்டும் என ஏன் கூற வேண்டும்? இங்குதான் திரு. சண்முகதாசன் படிதாண்டிப்போய்ந்திருக்கிறர்.

முதலாளித்துவ வாதிகள் தமது உற்பத்திப் பொருளை சந்தைப் படுத்துமுகமாக சுயநிர்ணய உரிமையை ஒரு கருவியாகப் பயன்படுத்தி பிரிவினை கோரி நிற்பார்களேயானல் அவர்களுடைய சுரண்டல் எண்ணத்தை அழித்தொழிக்க அத்தகைய பிரிவினைக் கோஷத்தை ஒரு குறிப்பிட்ட தேசிய இனத்தின் மத்தியிலுள்ள கம்யூனிஸ்டுகள் எதிர்க்க வேண்டும் என்பதே லெனின் வாதமாகும். இதை திரு. சண்முகதாசனல் கூற முடியாது.

ஏனெனில் தமிழர் விடுதலைக் கூட்டணியையே வசைபாடி திட்டித் தீர்ப்பதை உள்நோக்கமாகக் கொண்டு அரசியல்பேசும்அவர் "இவர்கள் தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தத்தான் பிரிவினை கோருகிறர்கள்" எனக்கூறி தமது சந்தர்ப்பவாத அரசியலை மேடையேற்ற முடியாது. ஏனெனில் தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் உற்பத்திப் பொருளும் கிடையாது அதை சந்தைப்படுத்தவேண்டிய தேவையும் கிடையாது என்பதால் சுரண்டலை உள்நோக்காகக் கொண்ட பிரிவினைக் கோஷமே தமிழ் ஈழம் என மக்கள் மத்தியிலும் எடுத்துக் கூற முடியாது.

கம்யூனிஸ்டுகள் எத்தகைய பிரிவினைக் கோஷத்தை எதிர்க்க வேண்டும் என லெனின் வரையறுத்துக் கூறினரோ அத்தகைய நோக்கம் இங்கே இன்மையாலும், லெனின் கூறிய மேற்கண்ட கூற்று தமிழர்களது "தனித் தமிழ் நாடு" கோரிக்கையை பொறுத்தமட்டில் பொருத்தமற்று காணப்படுவதாலும், திரு. சண்முகதாசன் தமக்கேற்ற வகையில் திரித்து, "பிரிந்து செல்லும் உரிமையை லெனின் ஏற்றர்; ஆனல் பிரிவினைக் கோரிக்கையை கம்யூனிஸ்டுகள் எதிர்க்க வேண்டும் எனக் கூறினர்" என கூறி ஒரு சரடு விட்டு லெனினிசப் போர்வையில் ஒரு நிர்வாண ஓட்டம் ஒடியிருக்கிறர்.

எவனுவது ஒருவன் சுயநிர்ணய உரிமைத் தத்துவத்திற்கு விரோதமாக தன்மனம்போன போக்கில் விமர்சனம் செய்து கொண்டு அதே வேளையில் தன்னை ஒரு பொதுவுடமை வாதியென்றே லெனினிசவாதியென்றே கூறிக்கொண்டு வாழ்வானேயாகில் அவன் ஒன்றில் லெனினிசம் பற்றியோ பொதுவுடமைக் கொள்கைகளைப் பற்றியோ A.B.C.D. கூட தெரியாதவனுகஇருக்கவேண்டும். அல்லது அரசியலையே தனது கடைசிப் புகலிடமாகக் கருதும் படு அயோக்கியனுக இருக்கவேண்டும் என்பதைத்தவிர இத்தகைய பேச்சுகளில் வேறெரு மாயமும் அறவே கிடையாது.

# 'ஈழத்தில் செத்தாலும் இத்தாலிக்கு வராதே'

## இளைஞர் ஒருவரின் துயர்தோய்ந்த அனுபவம்!

இக்கரைக்கு அக்கரைபச்சை என்பார்கள். வெளிநாடுகளில் வேலை கிடைக்கும் என்று நம்பி விபரமாக ஆராயாமல் அங்கு செல்லும் தமிழ் இளைஞர்கள் படும் கஷ்டங்களை விளக்கி, இத்தாலியில் இருந்து சுதந்திரன் ஆசிரியருக்கு இளைஞர் ஒருவர் கடிதம் எழுதியுள்ளார். அவரது அனுபவம் பேசுகிறது;— படியுங்கள்.

"தமிழர்கள் தற்போது இத்தாலியை நோக்கி தொகையாக வந்து கொண்டிருக்கிறர்கள். இத்தாலி, ஐரோப்பிய நாடுகளில் பின் தங்கிய நாடு. நிலையான பொருளாதார திட்டமும், அரசும் இல்லை. வேலையில்லாப் பிரச்சனை அதிகம். விரல் விட்டு எண்ணக் கூடிய தமிழர்கள் தான் ஏதோ நல்ல நிலையில் இருக்கின்றர்கள். மிகுதி அனைவரும் சொற்ப ஊதியத்தில் கஸ்டப்படுகின்றர்கள். கடந்த வாரம் 11 தமிழர்களை விமானநிலையத்தில் வைத்தே திருப்பி இலங்கைக்கு அனுப்பி விட்டார்கள். இத்தாலியில் 'சேர்க்கஸ்' நிறைய உண்டு. அங்கே கூடாரம் அடிப்பது, யானை, புலி, சிங்கம்போன்ற மிருகங்களுக்கு உணவிடுவது, கழிவுகள் அகற்றுவது போன்ற மிக கடினமான பயங்கர வேலை இருக்கின்றது. ஊதியம் குறைவு, வேலை நேரம் கூடுதல், அதாவது 16மணி நேர வேலை. மத்திய கிழக்கு நாடுகளை விட ஊதியம் குறைவு அத்துடன் பொருட்களின் விலையும் அதிகம். குறிப்பாக இத்தாலியில் விலைவாசி அதிகம் பண வீக்கம், முதலான பிரச்சனைகள். ஆகவே இத்தாலிக்கு வந்து பணம் தேடலாம் என்ற எண்ணத்தை கைவிட்டு விடுமாறு தயவு செய்து எமது தமிழ் இளைஞர்களுக்கு சுதந்திரன் வாயிலாக அறிவித்து விடுங்கள்;

வேலை உத்தரவுப் பத்திரம் கிடைப்பது அரிது. நான் பட்ட கஸ்டங்களை எழுதினல், ஆச்சரியப் படுவீர்கள். 6நாள் உணவேதுமின்றி ரோம் நகர வீதிகளில் குளிரின் கொடுமையைத் தாங்கிக் கொண்டு பிச்சை கேட்டுத் திரிந்தேன். அலைந்தேன் ஒருத்தராகுதல் உதவவில்லை. நினைத்தால் ஏன் இங்கே வந்தேன் என்ற எண்ணம் தான் ஏற்பட்டது ஊரில் தண்ணீரைக் குடித்துப் [illegible]ருந்திடலாம், இங்கே அதுவும் செய்ய முடியாது. குழாய் நீருடன் ஐஸ் கட்டியும் வரும் எப்படி குடிப்பது.

வெளிநாட்டுக்கு வருபவன் தான் படும் கஸ்டங்களை மறைத்து, வீட்டாருக்கும் நண்பர்களுக்கும் தான் நல்ல நிலையில் இருப்பதாக எழுதுவதினல் தான் வெளிநாட்டு மோகம் சகலருக்கும், ஏன் எனக்கும் ஏற்பட்டது. ஆகவே இதனை விளக்கமாக, விபரமாக எழுதி நமது இளைஞர்களுக்கு புத்தி கூறுங்கள். எப்படியும் Agency மூலமாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்று வேலை தேடுவது தான் நல்லதே தவிர, ஐரோப்பியநாடுகள் உதவாது. இத்தாலியில் சகலதும் தாய் மொழிப் பிரயோகம். ஆங்கிலம் தொடர்பு மொழியாகவோ, ஊடக மொழியாகவோ பாவிப்பதில்லை. பிரான்ஸ் மொழி, ஜேமன் மொழிதான் ஊடகம் தொடர்பு மொழியாக இத்தாலியில் இருக்கின்றது ஆகவே சகலதும் கஷ்டம்."

—இவ்வாறு அவர் எழுதியுள்ளார்.

சன்சயின் சோப்
ஈழம் எங்கும் விற்பனையாகிறது
-இது ஓர் லாலா தயாரிப்பு-
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● பொதுவான போராட்டத்தில் இணையவேண்டுமானால்

# நிபந்தனையற்ற சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும்!

## மானிப்பாய் பா. உ. மேதினச் செய்தி!

தமிழ் பேசும் தொழிலாளர்களுக்கும், உலகெங்குமுள்ள தொழிலாளர்களுக்கும் மேதினத்தில் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த நேரத்தில் தமிழ் பேசும் தொழிலாளர்களுக்கு சில செய்திகளையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழ் பேசும் தொழிற் சங்கங்கள் தமது தொழிலுரிமை, சம்பள உயர்வு, தொழிற்சங்க உரிமை, போன்றவற்றுக்கு மட்டுமன்றி தமிழ் தேசிய இனத்தின் சுதந்திரத்துக்கும் விடுதலைக்கும் போரட வேண்டிய நிலையிலுள்ளன. இந்தக் கடமையிலிருந்து தமிழ் தொழிற் சங்கங்கள் சிறிதும் விலக முடியாது.

ஆங்கில ஆட்சி அகன்ற பின் கடந்த 30 ஆண்டு கால வரலாற்றில் இந்நாட்டு தொழிலாள வர்க்கத்துக்கு இன்று ஏற்பட்டுள்ளது போன்ற ஆபத்து முன் எப்போதும் இருந்ததில்லை; வெள்ளையறிக்கை என்ற உருவத்தில் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் அனைத்தையும் பறிக்கும் சட்ட மூலம் ஒன்று இன்று முன்வைக்கப்பட்டிருக்கிறது. இதுசட்டமானால், 30ஆண்டுகளாக இந்நாட்டுத் தொழிலாள வர்க்கம் போராடி வென்று வந்த பல உரிமைகள் பறி போய்விடும். வேலை நிறுத்த உரிமை பறிமுதலாகும், வேலை நிரந்தரம் நிச்சயமற்றதாகிவிடும்; தொழில் பிரச்சினைகளையிட்டு முதலாளிகளும் தொழிலாளர்களும் தமக்குள் சமாதானத் தீர்வு செய்து கொள்ள முடியாது. இப்படி பல ஆபத்துக்கள் ஏற்பட இருக்கின்றன. இந்த நிலையை எதிர்த்துப் போராடுவதற்கு இந்நாட்டு தொழிலாளர்கள் ஒன்றுபட்டு இன்று இயங்க வேண்டியதவசியம்.

ஆனல், தமிழ் பேசும் தொழிலாளர்களைப் பொறுத்தவரை தமிழ் தேசிய இனத்தின் பிரிந்து போகும் உரிலமயுடன் கூடிய சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படும்வரை அவர்கள் வேறு தொழிற்சங்கங்களுடன் இணைந்து பொதுவான போராட்டமொன்றை நடத்த முடியாத நிலையில் உள்ளனர் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள்— தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை நிபந்தனையற்ற முறையில் அங்கீகரிக்கப்பட்டால் மட்டுமே சிங்களத் தொழிலாளர்களுடன் இணைந்து பொதுவான பிரச்சினைகளுக்காகப் போராட முடியும். இதையே மேதினத்தில் நான் அழுத்தமாக வற்புறுத்த விரும்புகிறேன்.



இவ்வாறு மானிப்பாய் பா.உ. திரு. வி. தர்மலிங்கம் சுதந்திரன் மூலம் விடுத்துள்ள மேதினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# சி. ஐ. டி. பொலிசார் மிலேச்சத்தனம்!

## கூட்டணி இளைஞர்கள்மீது அரசியல் பழிவாங்கலா?

முருங்கனில் அண்மையில் சி.ஐ டி. பொலிசார் மூவரும் பொலிஸ் ஜீப் டிரைவரும் கொலை செய்யப்பட்டது தொடர்பாக சந்தேகத்தின்பேரில் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படும் தமிழ் இளைஞர்கள் மிகவும் குரூரமான முறையில் அடித்துத்துன்புறுத்தப்படுவதாகவும், சித்திரவதைகளுக்குள்ளாக்கப்படுவதாகவும் புகார் செய்யப்படுகிறது. குறிப்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் இளைஞர் பேரவை ஆகியவற்றைச் சேர்ந்த அப்பாவி இளைஞர்கள் அரசியல் பழி வாங்கும் நோக்குடன் இவ்வாறு பொலிசாரின் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது.

முந்திய அரசாங்கத்தில் இருந்தது போல நாலாவது மாடித்துன்புறுத்தல்கள் தனது அரசாங்கத்தில் இருக்காதென்றும், விசாரணைக்கென அழைத்துச் செல்லப்படும் எவரும் நான்காவது மாடிக்கு அழைத்துச் செல்லப்படமாட்டார்கள் என்றும் ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆட்சிக்கு வந்த காலம் தொடங்கி பல தடவைகள் திருப்பித் திருப்பிக் கூறிவந்திருக்கிறர்.

ஆனல் ஜே. ஆர். அவர்கள் என்னதான் கூறிய போதிலும் பொலிசாரின் அதிகார ஆணவ வெறி இன்னும் தணிந்ததாக தெரியவில்லை. நான்காவது மாடிக்கு கொண்டு செல்லாவிட்டால், வேறு வசதியான இடங்களுக்கு சந்தேக நபர்களைக் கொண்டு சென்று அடித்துத் துன்புறுத்துகிறர்கள்; சித்திரவதை செய்கிறர்கள்.

முருங்கன் கொலை சம்பந்தமாக விசாரணை நடத்திவரும் சி. ஐ. டி.யினர் 'சந்தேக நபர்கள்' என்ற பெயரில் ஏராளமான இளைஞர்களை விசாரணைக்காகஅழைத்துச்சென்று விசாரணை முடிந்த பின்னர் விடுதலை செய்து வருகின்றனர். இவ்வாறு விசாரணைக்குட்படுத்தப்பட்டவர்களில் தமிழர் விடுதலைக்கூட்டணி-தமிழ் இளைஞர் பேரவை ஆகியவற்றின் கொழும்புக் கிளையைச் சேர்ந்த முக்கிய பிரமுகரும் ஒருவர் என்று தெரியவருகிறது.

இந்த இளைஞர் கொழும்பில் உள்ள அவரது வீட்டிலிருந்து சி. ஐ. டி. பொலிசாரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும், இப்படி அழைத்துச்செல்லப்பட்ட அவர், வத்தளையிலுள்ள தனியார் வீடொன்றுக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்குவைத்து கடுமையாக அடிக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. இந்த இளைஞரை ஓர் இரவு முழுவதும் வைத்து துன்புறுத்திய பின்னர், மறுநாள் அவரை விடுதலை செய்தார்களாம்.

சந்தேக நபர்கள் என்று தாம் கருதுவோரை விசாரிப்பதற்கு பொலிசாருக்கு அதிகாரம் உண்டெனினும், முந்திய அரசாங்கத்தில் நடைபெற்றது போல விசாரணைக்கு கூட்டிச் செல்லப்படுவோரை மிருகத்தனமாக காரணமின்றி அடித்துத் துன்புறுத்தும் கொடுமைக்கு அரசாங்கமும், ஜனதிபதியும், பொலீஸ் மாஅதிபரும், இரகசிய பொலீஸ் தலைவரும் மனிதத் தன்மையின் பேரால் உடனடியாக முற்றுப்புள்ளி வைப்பார்களா என்று மனித உரிமையை நேசிப்போர் கேட்கின்றனர்.

## தமிழர் விடுதலைக் கூட்டணி

### ஊர்காவற்றுறைத் தொகுதிக் கிளை

தமிழர் விடுதலைக்கூட்டணி ஊர்காவற்றுறைத் தொகுதிக் கிளை நிறுவற் கூட்டம் சென்ற 19 4-78ல் ஊர்காவற்றுத் தொகுதிப் பா. உ. அவர்களின் அலுவலகத்தில் நடைபெற்றது.

தொகுதியிலுள்ள பத்தொன்பது கிளைகளிலும் இருந்து பிரதி நிதிகள் வருகை தந்திருந்தனர். பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் பின்வருவோர் அலுவலர்களாகத் தெரிவு செய்யப்பெற்றனர்.

தலைவர்:- திரு. கா.பொ. இரத்தினம் பா. உ. துணைத் தலைவர்:- திரு. வி. கே. சோமசுந்தரம் புங்குடுதீவு, செயலாளர்:- திரு.அ. போல் நாரந்தனை, துணைச்செயலாளர்:- திரு. மு. வே. மயில்வாகனம் அனலைதீவு. பொருளாளர்:- திரு. சி. இராசரத்தினம் வேலணை.

செயற்குழு உறுப்பினர்களாக மேற்படி அலுவலர்களுட்பட வே. சுந்தரலிங்கம நெடுந்தீவு. சி. நா. மதியாபரணம் நயினதீவு, வி. இம்மனுவேல் மண்டைதீவு, வ. சபாரத்தினம் அல்லைப்பிட்டி. வி. அரங்கதாசன் ஊர்காவற்றுறை ஆ. ச. திருநாவுக்கரசு எழுவைதீவு, டாக்டர் சி. கணேசு புங்குடுதீவு, மு. சண்முகநாதன் கரம்பன். சி. கந்தசாமி வேலணை, சி. நகுலேசபிள்ளை சரவணை, என்பவர்கள் தெரிவு செய்யப்பெற்றனர்.

## இராமநாதன் நூல் வெளியீட்டு விழா

திரு. மு. வைத்திலிங்கம் பீ. ஏ. அவர்களால் எழுதப்பட்ட "சேர்.பொன். இராமநாதன் வாழ்க்கை வரலாறு தொகுதி இரண்டு" வெளியீட்டு விழா 5-5-78 வெள்ளிக் கிழமை மாலை 6மணிக்கு கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் திரு. சழவேந்தன் தலைமையில் நடைபெறும். இந்த விழாவை ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவையினர் எடுக்கின்றனர்.

நூலை திரு. மு. சிவசிதம்பரம் பா.உ. வெளியிட்டு வைக்க,நூலின் முதற்படியை கட்டடக்கலைஞர் திரு. வி.எஸ். துரைராஜா வாங்க, கலாநிதி சு. பத்மநாதன், அருட்திரு. சா. ம. செல்வரத்தினம் அடிகள். ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர்.

திரு. சௌ. தொண்டமான். சிலாபம் பா. உ. திரு. ஈரிந்திர கொரியா, திரு. பேனுட் சொய்சா, திரு. கே. சி. நித்தியானந்தா, திரு. கோவை மகேசன் (ஆசிரியர் சுதந்திரன்),கலாநிதி பொன், சத்தியநாதன், ஜனப். எம். சி. எம். கலீல் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர். செல்வி திலகவதி கணபதிப்பிள்ளை தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடல் பாடுவார். திரு. வைத்திலிங்கம் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவுறும்.

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் விடுக்கும் மே நாள் செய்தி

உலகத் தொழிலாளர்கள் அனைவரும் கொண்டாடும் மே தினத்தை தமிழ்த் தொழிலாளர் ஒன்றிணைந்து கொண்டாடுவதன் மூலம் தமிழினத்தின் ஒற்றுமையையும் எமது மூலாதாரக் கோரிக்கையில் வைத்துள்ள உறுதியான நம்பிக்கையையும் சிறிலங்கா அரசுக்கும் உலகுக்கும் உணர்த்த வேண்டும்.

தமிழ்த்தொழிலாளர்வர்க்கத்தின் பிரச்சினைகள் கோரிக்கைகள் ஏல ஏனைய இனத்தவர்களின் பிரச்சினைகள் கோரிக்கைகளின்று வேறுபட்டவை என்பதை, வேறுபட்டு மாற்று அணிகளில் நின்ற தமிழ்த் தொழிலாளரும் உணர்ந்து ஒன்றுபட்டிருக்கும் இச்சந்தர்ப்பம் எமக்கு ஒரு நம்பிக்கை ஒளியைக் காட்டுகிறது.

இந்த ஒற்றுமையை மேலும் வளர்த்து எமது மூலாதார நோக்கத்தை வென்றெடுக்க உழைப்போமெனச் சகல தொழிலாளரும் இத்தினத்தில் சங்கற்பம் செய்துகொள்வோமாக.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கப் பொதுச் செயலாளர் திரு. நா. பாலசுப்பிரமணியம் விடுத்துள்ள மேதினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை கொழும்பு-12, 194 ஏ, பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் இலோன் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு மாதம் மே 3-ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுவெளியிடப்பட்டது: அச்சுப் பதிப்பு: வஸ்தியன் அச்சகம், பிரதான வீதி, யாழ்ப்பாணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org